சார்பு நீதிமன்றம், குளித்தலை
OS.No. 96/2013

பெயர்:கந்தன் (எ) கந்தசாமி வா.சா.2 தேதி **20.11.2024**

1,3,4 மற்றும் 5 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

6 முதல் 13 இலக்க சொத்துக்களை பொறுத்து சரியான விபரங்களை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. ரெத்தினம், மருதமுத்து ஆகியோர்களின் வாரிசுகளை வழக்கில் சேர்க்காததால் மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. என்னுடைய திருமணத்திற்கும், 2 வது பிரதிவாதியின் திருமணத்திற்கும் நிறைய செலவுகள் செய்து சீர்வரிசைகள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் வாதிக்கும், 2 ம் பிரதிவாதிக்கும் சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 3,4,5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தனித்தனிய சொத்துக்களில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 10.07.2000 தேதியிட்ட ஆவணத்தை சகுந்தலா பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எங்கள் ஊரைச்சேர்ந்த பெரியசாமி, கனகராஜ் என்பவர்களை தெரியுமா என்றால் தெரியாது.

மறு விசாரணை – இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–(ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.